2026 – பிப்ரவரி மாதம் 12–ஆம் தேதி வியாழக்கிழமை.

தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 113/2023*

*2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய RW 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. K. மனோரஞ்சிதம் ,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | RW 1, ஆனந்த் |
| தந்தையார் பெயர் | : | ஜீவானந்தம் |
| ஊர் | : | பெரம்பலூர் |
| வட்டம் | : | பெரம்பலூர் |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | Designer in Universe Air Solution |
| வயது | : | 27 |

<u>தேதி: 12.02.2026</u>

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் இந்த மனுவில் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் ஆஜராகியுள்ளேன். கடந்த 2022–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள் தேதி நியாபகம் இல்லை. மாலை 2.00 மணியளவில் எனது தந்தைக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதிய பேருந்து நிலையத்திற்கு செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது வலதுபுறம் உள்ள பெட்ரோல் பங்கிற்கு செல்வதற்காக வலதுபுறமாக U turn செய்து திரும்பும் பொழுது புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் நோக்கி கிழக்கிலிருந்து மேற்குநோக்கி வந்த இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபர் அங்கிருந்த வேகத்தடை இருப்பதை கவனிக்காமல் ஓட்டி வந்து எனது வாகனத்தின் இடது முன்பக்கத்தில் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்தில் எனக்கு இடது கால் மூட்டில் சவ்வு கிழிந்துவிட்டது. இடது கால் பாதத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது முகத்தின் இடதுபக்கத்தில்

சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. பின்னால் அமர்ந்திருந்த எனது தங்கைக்கும் காயங்கள் ஏற்பட்டுவிட்டது. விபத்து சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. எனது இருசக்கரவாகனத்தில் மோதிய நபருக்கு வலதுகையிலும் மற்றும் முகத்திலும் அடிப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபர் தலைக்கவசம் அணியவில்லை. விபத்திற்கு எனது வாகனத்தில் மோதிய நபர்தான் காரணம்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் விபத்து தொடர்பான குற்ற வழக்கில் குற்றத்தை ஒப்புக் கொண்டு பெரம்பலூர் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் அபராதம் ரூ.1000/- செலுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி விபத்து சம்மந்தமாக என் வாகனத்தின் மீது மோதிய நபர் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் செல்ல வேண்டிய பெட்ரோல் பங்க் டிவைடர் பிரிவிற்கு எதிர்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பெட்ரோல் பங்க் செல்வதற்காக நான்தான் பக்கவாட்டில் வந்த வாகனத்தை கவனிக்காமல் சாலையைக் கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:- இல்லை.</u>**

**ஒப்பம்/-கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**